**அசல் வழக்கு எண்.44/2021**

**தேதி: 14.10.2025.**

**வா.சா.1 : 22.07.2025 அன்று தாக்கல் செய்யப்பட்ட முதல் விசாரணைக்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

**சாட்சி பெயர்- திருமதி. சிவசக்தி, க/பெ. நவின்குமார்**

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை-**

என் தாத்தாவின் பெயர் மாணிக்கம். அவர் என் அம்மாவின் அப்பா. என் அம்மாவின் அம்மா பெயர் ஜெயம்மாள். என் அம்மாவின் அப்பா எப்போது இறந்துவிட்டார் என்றால் 1971 அல்லது 1972 எனக்கு சரியாக ஞாபகமில்லை. ஜெயம்மாள் எப்போது இறந்துவிட்டார் என்றால் எனக்கு வருடம் தெரியாது, ஆனால் என் அம்மாவின் திருமணத்திற்கு முன்பு ஜெயம்மாள் என்பவர் இறந்துவிட்டார்.

நான் மாணிக்கம் என்பவரையும் ஜெயம்மாள் என்பவரையும் பார்த்ததில்லை. மாணிக்கம் மற்றும் ஜெயம்மாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 மகள்கள் மற்றும் 1 மகன். தவமணி, பார்வதி மற்றும் என் அம்மா விஜயகுமாரி மற்றும் என் மாமா இளங்கோவன் ஆவார்கள். இளங்கோவன் தான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மனைவி என்றாலும் 3 மற்றும் 4வது பிரதிவாதிகள் 1வது பிரதிவாதியின் மகன்கள் என்றாலும் சரிதான்.

தவமணி, பார்வதி ஆகியோர் என் பெரியம்மா. அவர்களுக்கும் எனக்கும் எந்தவித விரோதமும் இல்லை என்றால் சரிதான். தவமணி, பார்வதி ஆகியோர்

வழக்கு போட வரவில்லையா என்றால் நான் கேட்கவில்லை. தவமணி, பார்வதி ஆகியோர் இந்த வழக்கில் ஆஜர் ஆகவில்லையா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் அம்மாவின் அப்பா 1971ல் இறந்துவிட்டதாக நான் என்னுடைய தாவாவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என் அம்மாவின் அப்பா இறக்கும் போது அவருடைய வாரிசுகளான 3 மகள்களுக்கும் 1 மகனுக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான், அதை நான் என் பெரியம்மா சொல்லி கேள்விப்பட்டுள்ளேன்.

என் அம்மாவின் அப்பா பெயரில் இந்த தாவாவில் குறிப்பிட்டுள்ள சொத்து மட்டும் தான் உள்ளதா, அல்லது அதை தவிர வேறு ஏதாவது சொத்து உள்ளதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை, எனக்கு தெரிந்ததை இந்த வழக்கில் போட்டுள்ளேன். என் அம்மா அவருடைய அப்பாவின் மொத்த சொத்து விவரத்தை பற்றி சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. தவமணி என்பவருக்கு 1974ல் திருமணமாக செய்யாறில் உள்ள வீரம்பாக்கத்தில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். 6வது பிரதிவாதி பார்வதி என்பவர் 1980ல் திருமணமாகி லாடப்பாடி என்ற ஊரில் அவருடைய கணவருடன் வசித்துவருகிறார் என்றால் சரிதான்.

இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு நான் என் அம்மாவின் அப்பா பெயரில் தாவா சொத்துக்கள் இல்லாமல் வேறு எந்தெந்த சொத்துக்கள் உள்ளது என்பதற்கு வருவாய் துறை ஆவணங்கள் மூலம் ஏதாவது சரிபார்த்தேனா என்றால் சரிபார்க்கவில்லை. என் அம்மாவின் அப்பா இறந்துவிட்ட பிறகு குடும்பம் உறவுகள் என் அம்மாவின் அம்மா ஜெயம்மாள் தான் கவனித்து வந்தார் என்றால் சரிதான். என் அம்மாவின் அப்பா இறக்கும் போது இளங்கோவனுக்கு 5 அல்லது 6

வயது இருக்கும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

தவமணி, பார்வதி ஆகியோருக்கு ஜெயம்மாள் தான் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். இந்த தாவாவில் குறிப்பிட்டுள்ள 3 அயிட்ட சொத்துக்கள் வருவாய் துறை ஆவணத்தில் என் தாத்தாவின் பெயரில் இருந்ததா என்றால் இருந்தது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் அதை என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் பட்டாவை பார்த்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன்.

வா.சா.ஆ.2 பட்டா ஆவணத்தில் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் 1வது பிரதிவாதி பெயரில் உள்ளது. என் அம்மாவின் அப்பா பெயரில் தான் வழக்கு சொத்துக்கள் உள்ளது என்பதனை நிரூபணம் செய்ய பட்டாவை தவிர நான் வேறு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அம்மாவும் அப்பாவும் திருமணம் செய்து கொண்ட தேதி, மாதம், வருடம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, ஏன் என்றால் நான் சிறிய வயதாக இருக்கும் போதே என் அம்மா இறந்துவிட்டார்.

என் அம்மாவின் அப்பா இறந்துவிட்ட பிறகு என் பாட்டி ஜெயம்மாள் என் தாத்தா விட்டு போன சொத்துக்களை விற்று என் பெரியம்மாக்கள் தவமணி மற்றும் பார்வதி ஆகியோருக்கு திருமணம் செய்து வைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தாத்தா வைத்துவிட்டு போன சொத்துக்களில் என் பாட்டி ஜெயம்மாள் விற்ற சொத்துக்களை சொல்லாமல் 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள சொத்தை பொறுத்து மட்டும் பகுதியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால் இந்த வழக்கு செல்லாது என்றாலும் சரியல்ல.

(1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.